முன் வைத்து இந்த மன்ற நடவடிக்கைகளை வெளியிடுவதையும், மன்ற நடவடிக்கைகள் பற்றிக் கட்டுரைகள் எழுதுவதையும் நான் பார்த்திருக்கிறேன். இவையெல்லாம் தவிர்க்கப்படவேண்டும். எல்லாப் பத்திரிகைகளுமே தங்கள் மேலான கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவேண்டும், ஏற்றுக்கொள்வார்கள் என்றே நான் நம்புகிறேன்.

III.—ANNOUNCEMENTS BUSINESS OF THE HOUSE

MR. SPEAKER : Consideration of the calling attention notice under Rule 41 of the Assembly Rules is adjourned since the Hon. Minister concerned is indisposed.

There is another item, viz., one-hour discussion under Rule 57 of the Assembly Rules, proposed by Sri K. Mookiah Thevar. It relates to Agriculture. Are we going to have a debate on that to-day? We will now be taking up Demand No. XII—Police. We shall continue the discussion on this Demand till 1-15 p.m. Then we shall have the one-hour discussion under Rule 57 of the Assembly Rules and finish it. I hope the Hon. Minister for Agriculture is ready for that?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.

MR. SPEAKER : Very well. Let us now take up Demand No. XII—Police.

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963-64—*cont.*

DEMAND NO. XII—POLICE

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 8,10,79,400 under Demand No. XII—Police".

கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற ஆண்டில் இம்மானியத்திற்கு நான் கோரியதைவிட இந்த ஆண்டில் அதிகமாகக் கோரியிருக்கிறேன் என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள். இதற்கு முக்கியமான காரணம் நெருக்கடி நிலைமைதான். நெருக்கடி நிலைமையையொட்டி புதிய பல பொறுப்புகள் போலீஸ் இலாகாவினர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. அதற்கு ஏற்றபடி போலீஸ்படையை விரிவுபடுத்த வேண்டியிருக்கிறது. வேறு சில பகுதிகளையும் அமைக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் இவ்வாண்டு செலவினங்கள் அதிகரித்திருக்கின்றன என்பதை கனம் அங்கத்தினர்கள் நன்கு அறிவார்கள்.

மலபார் ஸ்பெஷல் போலீஸ் கம்பெனிகள் நான்கு, இரண்டு பெட்டாலியன் மத்திய அரசாங்கத்தின் வேலைக்காக நாகாலாண்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதேபோல் எம். எஸ். பி. கம்பெனிகள் இரண்டும், எஸ். ஏ. பி. பெட்டாலியன் ஒன்று, கம்பெனிகள் இரண்டும் வங்காளத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இப்படி அனுப்பிவிடப்பட்டவர்களுக்குப் பதிலாக நாம் இங்கே இரண்டு இந்தியா ரிசர்வ் பட்டாலியன் என்று அமைத்திருக்கிறோம். இப்படி அமைக்கப்பட்ட இந்த இரண்டு படையினருக்கும் பயிற்சி அளிக்கவேண்டிய பெரும் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. நம் மாநிலத்திற்கு ஆகும் இந்தச் செலவை எல்லாம் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

அதோடு ஏற்கனவே உள்ளவர்களுக்கே இன்னும் சில பயிற்சிகள் புதிதாக அளிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அளிக்கும் பயிற்சிக்கு ஆகும் செலவில் பாதித் தொகையை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது.